பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(12.03.2025 முதல் 16.03.2025 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல்(அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 020 (03) PJN/GKMS/2025 தேதி: 11.03.2025

### காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (06.03.2025 முதல் 10.03.2025 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -16.03.2025 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 06/03 | 07/03 | 08/03 | 09/03 | 10/03 | | நாள்-1 12/03 | நாள்-2 13/03 | நாள்-3 14/03 | நாள்-4 15/03 | நாள்-5 16/03 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 55 | 30 | 0 | 0 | 0 |
| 35 | 35 | 33 | 33 | 33 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 31 | 31 | 31 | 31 | 31 |
| 22 | 22 | 25 | 20 | 22 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 25 | 25 | 25 | 26 | 26 |
| 5 | 4 | 4 | 4 | 2 | மேக மூட்டம் | 6 | 6 | 6 | 7 | 7 |
| 61-98 | 69-95 | 61-92 | 77-89 | 69-85 | ஈரப்பதம் (%) | 64-76 | 64-76 | 64-76 | 74-80 | 74-80 |
| 2 | 2 | 2 | 2 | 3 | காற்றின் வேகம் (கி.மீ) | 10 | 6 | 6 | 10 | 6 |
| வட கிழக்கு | வட மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | வடக்கு வட மேற்கு | காற்றின் திசை | கிழக்கு தென் கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (12.03.2025 முதல் 16.03.2025 வரை):**

மார்ச் 12 மற்றும் 13 தேதிகளில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஒரளவுக்கு மேகமூட்டத்துடன் வறண்ட வானிலையாகக் காணப்படும். வெப்பநிலை 25-31 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 64-80 சதவிகித மாகவும், காற்றின் வேகம் 06-10 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் கிழக்கு தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| எள் | விதைத்தல் | நெல் தரிசு எள் VRI (SV) 1 ஐ ஹெக்டேருக்கு 5 கிலோ என்ற அளவில் பிப்ரவரி 15 முதல் மார்ச் 15 வரை விதைக்கலாம். ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மா அல்லது 2 கிராம் கார்பன்டாசிம் கொண்டு விதை நேர்த்தி செய்யவும். |
| பருத்தி | விதைத்தல் | நெல் தரிசு நார் பயிரான பருத்தி MCU 7 அல்லது SVPR 3 போன்ற ரகங்களின் பஞ்சு நீக்கிய விதைகளை ஹெக்டேருக்கு 7.5 கிலோ என்ற அளவில் விதைக்கவும். |
| உளுந்து மற்றும் | பூக்கும் பருவம் | TNAU பல்ஸ் வொண்டரை ( பயிர் அதிசியம்) ஒரு ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்களின் துவக்க நிலையில் இலைவழி தெளித்தால் பூ உதிர்தல் குறைகிறது, மகசூல் அதிகரிக்கிறது |

| | | |
|---|---|---|
| பச்சைப்பயறு | | |
| ஆடு | அம்மை நோய் | வெயில் காலத்தில் ஆடுகளுக்கு அம்மை நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. எனவே ஆடு வளர்ப்போர் தங்கள் ஆடுகளுக்கு அம்மை நோய் வரமால் தடுக்க வெயில் காலத்திற்கு முன்பாகவே அம்மை தடுப்பூசி போட வேண்டும். |
| கால் நடை | உண்ணி காய்ச்சல் | கால்நடைகளில், ஒட்டுண்ணியால் உண்ணி காய்ச்சல் நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.<br>இந்நோயானது புற ஒட்டுண்ணிகள் கறவை மாடுகளின் ரத்தத்தை உறிஞ்சும்போது, மாடுகளுக்கு உண்ணி காய்ச்சல் உண்டாகும். நோய் தாக்கப்பட்ட கறவை மாடுகளின் கண் இமைகளின் சவ்வு மற்றும் இனப்பெருக்க உறுப்பின் சவ்வு போன்றவை வெளிர்நிறத்தில் காணப்படும்.<br>சிவப்பு நிறத்தில் சிறுநீர் கழிக்கும்; ரத்தசோகை, மஞ்சள் காமாலை போன்ற அறிகுறிகள் ஏற்படும். இவற்றை கவனிக்காமல் விட்டு விட்டால் சில நாட்களுக்கு பிறகு, மூச்சுத்திணறல் ஏற்பட்டு, மாடுகள் இறக்க நேரிடும்.<br>இந்நோயை கட்டுப்படுத்த, கால்நடை மருத்துவரை உடனடியாக அணுகவும்.<br>கொட்டகையை சுத்தமாக பராமரித்தாலே, உண்ணிக்காய்ச்சல் நோயை தவிர்க்கலாம்.<br>இந்நோயைத் தடுக்க உண்ணியைக் கட்டுப்படுத்த பூட்டாக்ஸ் என்ற மருந்தை 1 லிட்டருக்கு 2 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கவேண்டும். மாடுகளை இம்மருந்து கொண்டு குளிப்பாட்டலாம். கால்நடைக் கொட்டகைக்கு அருகாமையிலுள்ள இடங்களிலும் இம்மருந்தினை தெளிக்கவேண்டும். |

**குறுஞ்செய்தி:** நெல் தரிசு எள்ளை மார்ச் 15 வரை விதைக்கலாம்.

**முதல்வர்**